### S.I.R. – சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை கண்டித்து

# செங்கல்பட்டில் 11-ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அணி திரள்வோம்!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கூட்டத்தில் முடிவு என தா.மோ. அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், நவ.9-

S.I.R. சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகள் செங்கல்பட்டில் வருகிற 11-ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கூட்டணிக்கட்சியினர் ஆயிரக்கணக்கில் அலைகடலெனத் திரண்டுவந்து பங்கேற்பது என்று மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது என்று மாவட்ட தி,மு.க. செயலாளர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் மாவட்டத் தலைவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் பல்லாவரம் 200 அடி ரேடியல் சாலையில் அமைந்துள்ள விதூர் மகால் திருமண மண்டபத்தில் மாவட்ட தி.மு.க செயலாளர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

**அனைத்துக் கட்சியினர் பங்கேற்பு!**

மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் ஆர்.எஸ்.செந்தில்குமார், கே.வி.திலகர், ஆர்.சுந்தரமூர்த்தி, எஸ்.ஜெ.நிக்கோலஸ், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் சைதை சுப்பிரமணியன், மா.வை.மகேந்திரன், பூ.லோகநாதன், பாரத் ராஜேந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர்கள் இரா. வேல்முருகன், ப.சு.பாரதி, கே.நேரு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர்கள் ஏ.ராஜ்குமார், பா.கார்த்திக், முஸ்லீம் லீக் கட்சி மாவட்ட தலைவர்கள் எஸ்.முகமதுபேக், கே.ஷேக் தாவூத்,

விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் சைதை மா.ஜேக்கப், கு.தென்னவன், ப.சாமுவேல் எபினேசர், திருநீர்மலை தமிழரசன், மேனகாதேவி கோமகன், கனல்விழி, மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர்கள் ஜெ.சலீம்கான், டி.முகம்மது யூசப், எஸ்.கே.ஜாகிர் உசேன், திராவிடர் கழக மாவட்ட தலைவர்கள் வேலூர் பாண்டு, செம்பியன், திராவிடர் கழக மாவட்ட செயலாளர் நாத்திகன்,

தமிழக வாழ்வுரிமை கட்சி மாவட்ட செயலாளர்கள் வழக்கறிஞர் செல்லா, தாம்பரம் பி.முருகன், திராவிடர் இயக்க தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் அன்பு, விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி மாநில துணைத் தலைவர் என். லட்சுமணன், சமத்துவ மக்கள் கழக மாவட்ட செயலாளர் பழனி முருகன், ஆம் ஆத்மி கட்சி மாவட்ட செயலாளர்கள் ராஜ்குமார், ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், விடுதலை சிறுத்தைகள் மாநில துணைச் செயலாளர் எஸ்.எஸ்.பாலாஜி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.பீம்ராவ், மனிதநேய மக்கள் கட்சி மாநில துணைச் செயலாளர் எம்.யாக்கூப், மனிதநேய மக்கள் கட்சி தலைமைப் பிரதிநிதி எஸ்.எம்.ஷாஜகான், திராவிடர் இயக்க தமிழர் பேரவை மாநில துணைச் செயலாளர் இ.இளமாறன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எல்.இதயவர்மன், ஒன்றிய செயலாளர்கள் பையனூர் சேகர், எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், ஏ.வந்தேமாதரம், ஏ.மணி, பகுதி செயலாளர்கள் வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, என்.சந்திரன், பி.குணாளன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட்,

நகரச் செயலாளர்கள் டி. பாபு, என்.நரேந்திரன், கோ.சத்தியமூர்த்தி, எஸ்.ஜபருல்லா, பேரூர் செயலாளர் ஜி.டி.யுவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**சிறுபான்மையினர் வாக்குகளை குறி வைக்கும் நோக்கு!**

நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள், S.I.R. சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வுக்கு தொடக்கத்தில் இருந்தே எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், எசேச்சாதிகாரப் போக்குடனும் தேர்தல் ஆணையம் செயல்பட்டு தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில்,

தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிரப்பு தெரிவித்த போதிலும் இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளது.

சிறுபான்மையினர் வாக்குகள், பா.ஜ.க.வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறி வைத்து நீக்கும் நோக்கோடு தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்குப் பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைச் செய்திட முயன்றிருப்பதோடு,

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் S.I.R. திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகதை அடியோடு குழி தோண்டி புதைப்பதாகவும் உள்ளது,

அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது. சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வின் (S.I.R.) மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழையின் உச்ச காலமான, கனமழை மற்றும் மோசமாக வானிலை எதிர்பார்க்கப்படும் காலத்தில் தமிழ்நாடு வாக்காளர்களில் பெரும்பாலோர் கிராமப்புற மக்களாக விவசாயிகளாக இருப்பதால், Enumeration Form கணக்கெடுப்புப் படிவங்களைப் பெற்று, அப்படிவத்தை பூர்த்தி செய்து, திரும்ப அளிக்க நேரம் கிடைக்காது.

இந்த செயல்முறையில் பெரும் எண்ணிக்கையில் வாக்காளர்கள் நீக்கப்படுவார்கள். அதோடு, வருவாய்த் துறையும் கனமழையால் எழும் சூழ்நிலைகளைக் கையாள்வதில் ஈடுபட வேண்டிய நிலை உள்ளது.

எனவே, இந்த காலம் கணக்கெடுப்புப்புக்கு உகந்த காலம் இல்லை என்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் தனித்தனியே அறிக்கை விடுத்து எதிர்ப்பு தெரிவித்தும் தேர்தல் ஆணையம் தொடர்ந்து தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை நடைமுறைப்படுத்தி வருகிறது.

எனவே, இந்த S.I.R. சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும், அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி, ஏதேச்சாதிகாரப் போக்கில் இந்திய தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு S.I.R. கொண்டு வந்துள்ளதை கண்டித்து,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் செங்கல்பட்டு நகரில், பழைய பேருந்து நிலையம் அருகில் வருகிற 11.11.2025 செவ்வய்கிழமை அன்று காலை 10.00 மணியளவில், மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடத்துவது எனவும்,

**அலைகடலென திரண்டு வாரீர்!**

இக்கண்டன ஆர்பாட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட மாநரக ஒன்றிய நகர பகுதி பேரூர் நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சியினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அலைக்கடலெண திரண்டு வந்து, இக்கண்டன ஆர்பாட்டத்தில் பங்கேற்று சிறப்பிப்பது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகள் இணைந்து ஏகனமதாக முடிவெடுக்கிறது.

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு S.I.R.க்கு எதிராக நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கட்சி கூட்டத்தில் நிறைவேற்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து ஒரு பக்கம் சட்டப்போராட்டம் நடத்தி வருகிறோம் என்றாலும்,

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருப்பதை நம்முடைய கூட்டணிக் கட்சிகளின் ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள் இணைந்து வாக்கு திருட்டு நடைபெறாமல் கண்காணிக்க வேண்டியது அவசியமானது என்பதை கருத்தில் கொண்டு,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் வாக்குச்சாவடிகளில் அடங்கிய நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் செயல் வீரர்கள் அனைவரும், பூத் அளவில் ஒன்றிணைந்து செயல்படுவது என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முடிவில் இத்தீர்மானங்களை விளக்கி மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியின தோடர் இனத்தை சேர்ந்த மாணவி செல்வி ஆர். நீத்துசின், தோடர் சமுதாயத்தில் முதலாவதாக அரசு ஒதுக்கீட்டின் கீழ் எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதையொட்டி பெற்றோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தமிழ்நாடு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல ஆணையத்தின் உறுப்பினர் கோடநாடு மு.பொன்தோஸ் உள்ளார்.



பல்லாவரத்தில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மாவட்டச் செயலாளர்கள் / மாவட்ட தலைவர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், வி.சி.க மாநில துணைச் செயலாளர் எஸ்.எஸ்.பாலாஜி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பீம்ராவ், மனித நேய மக்கள் கட்சியின் மாநில துணை பொதுச் செயலாளர் எம்.யாக்கூப் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மாவட்டச் செயலாளர்கள் / மாவட்ட தலைவர்கள் உள்ளனர்.

### கடந்த மூன்று ஆண்டுகளில் 6,453 மெட்ரிக் டன் கொள்முதல்:

# கேழ்வரகு கொள்முதல் இம்மாதம் முதல் தொடர்ந்து நடைபெறும்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!



சென்னை, நவ.9-

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளில் 6453 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு 3578 விவசாயிகளுக்கு ரூ. 26.48 கோடி வழங்கப்பட்டுள்ளது எனவும் நவம்பர் மாதம் முதல் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களில் கேழ்வரகு கொள்முதல் தொடர்ந்து செய்யப்படும் எனவும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் கேழ்வரகு கொள்முதல் திட்டம், கடந்த 2022-2023 கொள்முதல் பருவத்தில் முதற்கட்டமாக தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, 514 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது. இரண்டாம் கட்டமாக 2023-2024 கொள்முதல் பருவத்தில் ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களையும் சேர்த்து, 4 மாவட்டங்களில் மொத்தம் 1,889 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 2024-2025 கொள்முதல் பருவத்தில், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட விவசாயிகளிடமிருந்து 4050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது.

கடந்த மூன்றாண்டுகளில் 6453 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு 3578 விவசாயிகளுக்கு ரூ. 26.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு நவம்பர் மாதத்திலிருந்து, விவசாயிகளிடமிருந்து கேழ்வரகு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.48860 என்ற ஆதார விலையில் (Minimum Support Price) கொள்முதல் செய்யப்படும்.

நடப்பு 2025-2026-கொள்முதல் பருவத்தில் 01.11.2025 முதல் 31.01.2026 வரை தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறந்து விவசாயிகளிடமிருந்து 6000 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தமிழ்நாடு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் கொள்முதல் விலையான மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.42900 என்பதை விட இந்த ஆண்டு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.5960 கூடுதலாகும்.

ஆதலால் இந்த நல் வாய்ப்பினைப் பயன்படுத்தி, தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட கேழ்வரகு விவசாயப் பெருங்குடி மக்கள், தாங்கள் விளைவித்த கேழ்வரகினைத் தங்கள் மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.



சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று (08.11.2025) நடைபெற்ற பத்திரிகையாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமில், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை செயலியினை (TAEI Registry 2.0) தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, த.வேலு எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், உயர் அதிகாரிகள் திருமதி வே.அமுதவல்லி, மு. விஜயலட்சுமி, டாக்டர் எஸ். வினீத், மரு.இரா.வைத்திநாதன், அரசு அலுவலர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.


இரண்டாம் ஆண்டு

நினைவு அஞ்சலி



திருமதி. முனிரத்தினம்மாள்

தோற்றம்: 21-02-1950 ✦ மறைவு: 09-11-2023

அன்பின் விளக்காய், அறிவின் ஒளியாய், அமைதியின்
உருவாய் தாங்கள் விட்டுச் சென்ற நினைவுகள் என்றென்றும்
எம் மனங்களில் நீங்கா நிழலாய் நிலைத்திருக்கின்றன.

என்றும் நினைவில்...

ராடர்ப்ப புஜங்கராவ்
ராடர்ப்ப புஜங்கராவ் சிவக்குமார்
சுஜா சிவக்குமார்
சுவேதா சிவக்குமார்
குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.

கிருஷ்ணாபுரம் கிராமம், பொன்னேரி.

VIGNESH POLYMERS | ELECTRIC

SUJA PIPES & FITTINGS